இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,450 — JUNE 30, 1911.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

**No. 635, N. P.**—1911 ம் ஆண்டு ஆவணிமீ 15 ந் திகதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11·30 மணியளவில், தன் ஆபிசில், வட மாகாணத்து கவண்மேந்து ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித் துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம், விற்கப்படும் அல்லது உரித்து முடிவு செய்யப்படும். 12 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் வலிகாமம் வடக்குப் பகுதியிலிருக்கின்றது. பிளான் இலக்கம் 3,457. குறிச்சி—அளவெட்டி. காணிப் பெயர்—பிணுக்கைக்குளம்.

| காணித்துண்டின் இல. | உரித்தாளியின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 13011 | அரசாட்சி .. | சின்னத்தம்பி கணபதி கூட்டிச்சேர்த்தது .. .. | 0 | 0 | 2 |
| 13015 | ஷை .. | பனைமுத்து பெண் செல்லாச்சியும் ஆறுமுகம் பெண் கயிலாயமும் கூட்டிச்சேர்த்தது .. .. .. | 0 | 0 | 0·62 |
| 13016 | ஷை .. | கணவதிப்பிள்ளை குமாரவேலுப்பிள்ளையும் கதிரவேலு கணவதிப்பிள்ளையும் கூட்டிச்சேர்த்தது .. .. | 0 | 0 | 0·67 |
| 13020 | ஷை .. | கணபதி வேலு கூட்டிச்சேர்த்தது .. .. | 0 | 0 | 1·12 |
| 13022 | ஷை .. | அம்பளவாண சுவாமி கோவிலுக்காக எஸ். இராஜதம்பிரான் கூட்டிச்சேர்த்தது .. .. .. | 0 | 0 | 5 |
| 13023 | ஷை .. | நாராணபிள்ளை சினிவாசகம் கூட்டிச்சேர்த்தது .. | 0 | 0 | 3·50 |
| 13024 | ஷை .. | கணபதி மகள் அன்னமுத்து கூட்டிச்சேர்த்தது .. | 0 | 0 | 1·75 |
| 13032 | ஷை .. | மல்லாகம் சுப்பிரமணியர் சின்னப்பா கூட்டிச்சேர்த்தது .. | 0 | 0 | 6 |
| 13034 | ஷை .. | வேலுப்பிள்ளை கந்தரும் காத்தியும் கூட்டிச்சேர்த்தது .. | 0 | 0 | 3 |
| 13035 | ஷை .. | தம்பர் சபாபதி பெண் அன்னம்மாவின் உரித்தாளிகள் கூட்டிச்சேர்த்தது .. .. .. | 0 | 0 | 1 |

ஒடுக்குப்பணம் கட்டத்தவறிய காணிகள்.

பிளான் இலக்கம் 3,487. காணிப் பெயர்—பிணுக்கைக்குளம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13006 | மெஸ். எஸ். என். வேலுப்பிள்ளை .. | கூட்டிச்சேர்த்த நிலம் .. .. .. | 0 | 0 | 4 |
| 13008 | கே. ஏகாம்பரம் .. | ஷை .. .. .. | 0 | 0 | 0·87 |

தரிப்புவிலை ஒரு ஏக்கருக்கு ரூபா 1,200.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் அறியவேணுமாகில் வடமாகாணம் கவண்மேந்து ஏசன்றரிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகந்தோரின் பெரியதுரை யிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1911 ம் ஞு ஜூன்மீ 19 ந் உ.

ஹியூ. கிளிவ்வோட்,
கொலோனியல் சக்கிறத்தார்.

---

[Postponement of Land Sale at Trincomalee.]

திரிகோணமலைக் கச்சேரியில் 1911 ம் ஆண்டு ஆனிமாதம் 15 ந் திகதி நடைபெற நியமித்திருந்த காணி விற்பனவு மேற்படி மாசம் ஆடிமாசம் 4 ந் திகதி நடைபெறுமென் றித்தா லறிவிக்கப்படுகிறது.

இராசாங்க லிகிதர் கந்தோர்,
கொழும்பு, 1911 ம் ஞு ஆனிமீ 28 ந் உ.

ஹியூ. கிளிவ்வோட்,
இராசாங்க லிகிதர்.

---

## LAND ACQUISITION NOTICES.

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Getahetta, Ratnapura District.]

1876 ம் வருஷத்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி றயில்பாதை திறத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதம படத்து இலக்கம் 2,062. குறிச்சி—கெற்றகற்ற.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| O 7 | கலுகிற்றியவத்தை .. | தோட்டம் .. | சுவாரிசும் மறுபேரும் .. | 0 0 10·50 |

325

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் வருஷம் ஆவணிமாதம் 5 ந் தேதியிலன்று பகல் 1 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1911 ம் வருஷம் ஆனிமாதம் 16 ந் உ.

ஜி. கூக்சன்,
அரசாட்சி ஏசண்டு.

---

[Walagama, Kegalla District.]

1876 ம் வருஷத்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பகிரங்கவேலைக்கந்தோர் கூலிலயினுக்காக என்னும் பகிரங்க தேவைக்குவேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதம படத்து இலக்கம் 2,061. குறிச்சி—வலகம.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. பே. |
|---|---|---|---|---|
| N 7 | பன்சலகாவவத்தை .. | மரக்கறித்தோட்டமும் கூலிலயினும் .. | றுகவெலே றற்றேமாத்தயா (ஊர் அதிகாரி) .. | 0 1 21 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் வருஷத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1911 ம் வருஷம் ஜூலை (ஆடி)மாசம் 29 ந் தேதியிலன்று பகல் 1 மணிக்கு கேகாலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1911 ம் ஹு ஆனிமாதம் 20 ந் உ.

ஜே. கொன்ரேய்,
அரசாட்சி உதவி ஏசண்டு.

---

[Supreme Court Criminal Sessions for Ratnapura, at Colombo.]

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம்பிரசித்தப்படுத்துவதாவது : கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் றெட்டினபுரி டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1911 ம் ஆண்டு ஆடிமாதம் 10 ந் திகதியாகிய திங்கக்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதறகடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.

ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,

றெட்டினபுரி பிஸ்கால் கந்தோர்,
1911 ம் ஹு ஆனிமீ 16 ந் உ.

ஜீ. கூக்ஸன்,
பிஸ்கால்.

---

8497

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.